ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 946/8 - 1996 ඔක්තෝබර් 23 වැනි බදාදා - 1996.10.23

*946/8 ஆம் இலக்கம் - 1996 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி 21/78 iv*

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்

திருமதி சி. எஸ். கருணாரத்ன,<br>
செயலாளர்,<br>
பல்கலைக்கழக மானியங்கள்<br>
ஆணைக்குழு.

கொழும்பு,<br>
1996.10.21.

### கட்டளைச்சட்டம்

1\. இக்கட்டளைச் சட்டம் 1996 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப்பின்படிப்பு நிறுவகக் (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன்மேல் வலுவுக்கு வருதலும் வேண்டும்.

2\. 1979 திசெம்பர் 26 ஆந் தேதிய, 68/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, கமத்தொழில் பட்டப் பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டமானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அதன் 10 ஆம் பந்தியில் —

(1) அப்பந்தியின் (1) ஆம் உபபந்தியில (எ), (ஏ), (ஐ), (ஒ) அத்துடன் (ஔ) என்னும் வாசகங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வாசகங்களை இடுவதன்மூலம் :—

"(எ) சூழல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஏ) வனத் திணைக்களத்தின் தலைவர் ;

(ஐ) கமத்தொழில் ஆராய்ச்சிக் கொள்கைக்குப் பொறுப்பான தேசிய நிறுவனத்தின் நிறைவேற்றுத் தலைவர் ;

(ஒ) கமத்தொழில் திணைக்களத்தின் தலைவர் ;

(ஔ) கமத்தொழில் ஏற்றுமதித் திணைக்களத்தின் தலைவர் ;".

(ii) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் வாசகங்கள் (க) அத்துடன் (ங) என்பதை முறையே வாசகங்கள் (ங) அத்துடன் (ச) ஆக மீளஎழுத்திடுவதன் மூலம் ; அத்துடன்

(iii) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் (ஔ) என்னும் வாசகத்தை உடனடுத்து பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

"(க) ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் இலங்கை அங்கீகரிக்கப்பட்ட பெருந்தோட்ட ஆராய்ச்சி நிறுவகங்களின் பணிப்பாளர்களிடையேயிருந்து ஒரு பணிப்பாளர். இவ்வாசகத்தின் நோக்கத்திற்காக "அங்கீகரிக்கப்பட்டது" என்பது நிறுவகத்தின் விதப்புரையின் மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது எனப் பொருள்படும்".

(ஆ) அதன் 11 ஆம் பந்தியில் அப்பந்தியின் (6) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலம் :—

"(6) சபையின் ஒவ்வொரு அமர்விலும் சமுகமளிக்கின்ற முகாமைச்சபையின் உறுப்பினர் ஒருவருக்கு, அமைச்சர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையில் தீர்மானிக்கவேண்டியதான அத்தகைய கட்டணம் வழங்கப்படலாம்.".

(இ) அதன் 12 ஆம் பந்தியில் —

(i) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியில் "ஆராய்ச்சிகள்" என்னும் சொல்லை உடனடுத்து "நோக்கெல்லை" என்னும் சொல்லை உட்புகுத்துவதன் மூலம் ; அத்துடன்

(ii) அப்பந்தியின் (3) ஆம் உட்பந்தியின் (ஐ) என்னும் வாசகத்தில் "அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூட்டிணைக்கும் குழு ஒன்றும் நிமித்தக் குழுக்களும் உட்பட அத்தகைய எண்ணிக்கையினதான நிலையியற் குழுக்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

(ஈ) அதற்கான 13 ஆம் பந்தியில் அதில் நிரற்படுத்தப்பட்டுள்ள சிறப்புக் கூறுகளுக்குப் பதிலாகப் பின்வரும் கமத்தொழில் சிறப்புக் கூறுகளை இடுவதன் மூலம் :—

"(அ) கமத்தொழில் உயிரியல் ;
(ஆ) கமத்தொழில் பொருளியல் ;
(இ) கமத்தொழில் விசாலிப்பு ;
(ஈ) கமத்தொழில் பொறியியல் ;
(உ) விலங்கு விஞ்ஞானம் ;
(ஊ) பயிர் விஞ்ஞானம் ;
(எ) உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் ;
(ஏ) மண்வள விஞ்ஞானம் ;
(ஐ) உயிர் இரசாயனவியல் ; அத்துடன்
(ஒ) தாவரப் பாதுகாப்பு.".

(உ) அதன் 14 ஆம் பந்தியில் —

(i) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் (ஆ) என்னும் வாசகத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய வாசகத்தை இடுவதன் மூலம் :—

"(ஆ) கமத்தொழில் பீடத்தினால் கமத்தொழிற் சிறப்புக் கூறில் உள்ள ஆசிரியர்களிடையேயிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தோதான கமத்தொழில் சிறப்புக் கூறிலுள்ள பேராசிரியர் ஒருவரும் நான்கு வேறு ஆசிரியர்களும். இவ்வாசகத்தில் "பேராசிரியர்" என்பது, ஒன்றில் சிரேஷ்ட பேராசிரியர் அல்லது பேராசிரியர் பதவியை வகிக்கின்ற ஆள் ஒருவர் என்று பொருள்படும்.".

(ii) அப்பந்தியின் (7) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் :—

"(8) ஒவ்வொரு கற்கைச் சபையின் செயலாளருக்கும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படி, செயலாளராக அவரது சேவைகளுக்காக வழங்கப்படலாம்.

(9) கற்கைச் சபையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அச்சபையின் கூட்டங்களில் சமுகமளிப்பதற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படி வழங்கப்படலாம்." :

(ஊ) பந்தி 15 இன் (1) ஆம் உட்பந்தியில் "போதனை, கல்வி, ஆராய்ச்சி, தேர்வுகள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "போதனை, கல்வி, ஆராய்ச்சி, நோக்கெல்லை, தேர்வுகள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் :

(எ) பந்தி 25 இல் "கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறு" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"கமத்தொழிற் கல்விச் சிறப்புக்கூறு" என்பது கமத்தொழில் உயிரியல், கமத்தொழில் பொருளியல், கமத்தொழில் விசாலிப்பு, கமத்தொழில் பொறியியல், விலங்கு விஞ்ஞானம், உணவு விஞ்ஞானமும் தொழினுட்பமும், மண்வள விஞ்ஞானம், உயிர் இரசாயனவியல், தாவரப் பாதுகாப்பு அல்லது நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சிறப்புக்கூறு என்று பொருளாகும் : அத்துடன் ".

11-182